29.11.2016

தினமணி

## நெல் பயிரை காப்பீடு செய்ய நாளை கடைசி நாள்



விவசாயிகள் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்று பயன்பெற வரும் 30-ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வேளாண் துறை தெரிவித்துள்ளது.

பொன்னமராவதி வட்டாரத்தில் நடப்பு ராபி பருவத்தில் நெல், உளுந்து, நிலக்கடலை பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், இயற்கை இடர்பாடுகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை சரிகட்ட அனைத்து விவசாயிகளும் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயனடைய வேண்டும் என வேளாண் உதவி இயக்குநர் சி. ஜெயபாலன்

தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: நாடு முழுவதும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பிரதமரின் புதிய காப்பீட்டுத் திட்டம் பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டது. அதன்படி, ஏற்கெனவே பிர்கா அளவில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டம் வருவாய் கிராம அளவில் செயல்படுத்தப்படுகிறது. கடன்பெறும் மற்றும் கடன் பெறா விவசாயிகளுக்கான தவணைத்தொகை செலுத்தும் காலக்கெடு ஒரே நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புள்ளியியல் துறையிலிருந்து அறுவடை முடிவுகள் பெறப்பட்ட 60 நாள்களுக்குள் இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இழப்பீட்டு தொகை முழுவதும் காப்பீட்டு நிறுவனம் முழுமையாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே நடைமுறையில் உள்ள காப்பீட்டுத் திட்டங்களைவிட அதிக இழப்பீட்டுத் தொகை புதிய திட்டத்தில் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தை பொருத்தவரை சம்பா நெல் பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பயிர்க் கடன் தொகையான ஏக்கருக்கு ரூ. 23,000-க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தவணைத்தொகை ரூ. 4,370. இதில், 4,025 ரூபாயை மத்திய, மாநில அரசுகளே விவசாயிகளுக்காக செலுத்தியதுபோக விவசாயிகள் செலுத்தவேண்டிய பிரீமியம் ரூ. 345 மட்டுமே. இதேபோல, உளுந்து பயிருக்கு 12,000 ரூபாய்க்கு காப்பீடு செய்ய ரூ. 180, நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு ரூ. 19,000 காப்பீடு செய்ய ரூ. 285 பிரீமியமாக செலுத்தினால் போதுமானது. இந்த பிரீமிய தொகைகளை செலுத்த விண்ணப்பப் படிவத்துடன் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று கணினி சிட்டா நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் வங்கி கணக்குப் புத்தக நகலுடன் குறிப்பிட்ட தொகையை அருகேயுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலோ அல்லது கூட்டுறவு வங்கியிலோ

செலுத்தவேண்டும். எனவே, பொன்னமராவதி வட்டார விவசாயிகள் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் பங்கேற்று பயன்பெற வரும் 30-ம் தேதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**மழை பொய்த்ததால் நிலக்கடலை சாகுபடி பாதிப்பு: விவசாயிகள் கவலை**



மழை பொய்த்ததால், பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலக்கடலை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

பெருந்துறை சுற்று வட்டாரப் பகுதிகளான பெருந்துறை, திங்களூர், விஜயமங்கலம், ஈங்கூர், பெரியவீரசங்கிலி, பொன்முடி, சீனாபுரம், துடுப்பதி உள்பட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மானாவரி நிலங்களில், நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்த நிலையில், வடகிழக்குப் பருவ மழையும் இன்னும் பெய்யவில்லை. இதனால், மழையை நம்பி நிலக்கடலை சாகுபடி செய்த விவசாயிகள் மன வேதனைக்கு உள்ளாகியுள்ளனர். மழை இல்லாத நிலையில், பெரும்பாலான செடிகள் காய்ந்து சருகாகிவிட்டன. அதே சமயம் செடிகளில் காய்களும் போதிய அளவில் பிடிக்கவில்லை. அறுவடைக் காலமும் வந்து விட்டதால், வேறு வழியின்றி கால்நடைத் தீவனத்துக்கு உதவும் என்ற வகையில் அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். ஒரு ஏக்கருக்கு குறைந்தபட்சம் 15 மூட்டை நிலக்கடலை கிடைக்கும். தற்போது ஒரு மூட்டை கூட கிடைக்கவில்லை என்று விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

**செய்யாறு பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் கருகின: வயல்களில் மாடுகள் மேயும் அவலம்**



திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் வட்டாரம், நர்மாபள்ளம் பகுதியில் போதிய நீரின்றி வயல் நடுவே கருகிக் காணப்படும் நெற்பயிர்கள்.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில், பருவமழை பொய்த்ததாலும், நீர்நிலைகள் வறண்டதாலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்கள் கருகி வருகின்றன. இதனால், விவசாயிகள் கண்ணீர் விடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தஞ்சைக்கு அடுத்து நெல் விளைச்சலுக்கு பெயர் பெற்றது, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள செய்யாறு. இப்பகுதி விவசாயிகள், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்தது போல இந்த ஆண்டும் பருவமழை பெய்யும் என்று நம்பியும், கிணறு உள்ளிட்ட நீர்நிலைகளை நம்பியும் இரண்டாம் போக சம்பா இறவை சாகுபடியை தொடங்கினர். இதில், வெள்ளைப் பொன்னி, கோ-51, ஏடிடீ-045, 043 ஆகிய நெற்பயிர்களை அதிக அளவில் பயிரிட்டனர். சில பகுதிகளில் 6 மாத காலப் பயிரான பொன்னியும் பயிரிடப்பட்டன.

ஆனால், இந்த ஆண்டு பருவமழை பெய்யத் தவறியதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால், ஏரி, குளங்கள் வறண்டு காணப்படுகின்றன. இதன் காரணமாக பாசன நீரின்றி சம்பா பருவ நெல் பயிர்கள் கருகி, தீய்ந்து வருகின்றன. கருகிய நெற்பயிரை எல்லாம் மாடுகள் மேய்ந்து வருகின்றன. அதிலும், செங்கம்பூண்டி பகுதியில் கருகிய நெற்பயிரை மாடுகள் உண்ண மறுப்பதாகவும், அதனை வைக்கோலாகக் கூட பயன்படுத்த முடியவில்லை என்றும் விவசாயிகள் கண்ணீருடன் கவலை தெரிவிக்கின்றனர்.

நர்மாபள்ளம் விவசாயிகளின் நிலையோ மிகப்பரிதாபம். ஒரு மூட்டை விதை நெல் ரூ.1500-க்கு வாங்கி, ஆள் பற்றாக்குறை காரணமாக முழுக்க முழுக்க திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்று நட்டுள்ளனர். மேலும், ஒரு ஏக்கருக்கு விதை முதல் அறுவடை வரை நகை அடகு மற்றும் பயிர்க் கடன்

பெற்று சாகுபடி செய்த பயிர்கள் வீணாகிவிட்டதே என்று புலம்பித் தவிக்கின்றனர்.

அனக்காவூர் வட்டாரத்தில் நர்மாபள்ளம், குறும்பூர், மடிப்பாக்கம், வீரம்பாக்கம், தேத்துறை, மேல்நெமிலி, கிழாங்காம்பூண்டி, கோட்டகரம், முளகிரிப்பட்டு, கோவிலூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 600 ஏக்கர் நெல் பயிர்கள் கருகியதால் 350-க்கும் மேற்பட்ட விவசாயிகளும், செய்யாறு வட்டாரத்தில் மேல்கொளத்தூர், புதுக்கோட்டை, விண்ணமங்கலம், மாளிகைப்பட்டு, செங்கம்பூண்டி, திருமணி உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கர் நெற்பயிர்கள் கருகியதால் 500-க்கும் மேற்பட்ட விவசாயிகளும் வெம்பாக்கம் வட்டாரத்தில் சுமங்கலி, கரந்தை ஆகிய பகுதிகளில் சுமார் 100 ஏக்கர் நெல் பயிர்கள் கருகியதால் 60-க்கும் மேற்பட்ட விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர். விவசாயம் முற்றிலும் பாதித்து விட்டதால், பெருத்த நஷ்டத்தை சந்தித்துள்ள விவசாயிகள், அரசு உரிய இழப்பீடு வழங்க ப்4வண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.



கிழங்காம்பூண்டி கிராமத்தில் முற்றிலும் கருகி விட்ட நெற்பயிரை உண்ணும் கால்நடைகள்.

**ரூபாய் நோட்டுகள் செல்லாததால் டிச. 2 வரை நெல் கொள்முதல் நிறுத்தம்**



ரூபாய் நோட்டுப் பிரச்னையால், செங்குன்றத்தில் நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து செங்குன்றம் நெல் மண்டி உரிமையாளர்கள் சங்கத்தினர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: பழைய 500, 1,000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என மத்திய அரசு அறிவித்ததையடுத்து, வியாபாரத்தில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் ஆந்திரம், கர்நாடகம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து நெல் கொள்முதல் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பணம் தர முடியவில்லை. தொழிலாளர்களுக்கு கூலி தர முடியவில்லை. எங்களிடம் நெல் கொண்டு வரும் விவசாயிகளிடம் காசோலை கொடுத்தால், அவர்களால் பணம் எடுக்க முடியவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மத்திய அரசைக் கண்டிக்கும் வகையில் டிசம்பர் 2-ஆம் தேதி வரை செங்குன்றத்தில் உள்ள 40-க்கும் மேற்பட்ட நெல் மண்டிகளில் வியாபாரத்தை நிறுத்தி வைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது என அதில் குறிப்பிட்டுள்ளனர்.